Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95

Date of Publication : 1st of Every month | Date of Posting : 5th & 6th of Every month

Regd. No. TN / CC (S) DN / 119 / 12-14 | Licensed to Post without Prepayment WPP No. TN/PMG(CCR)/WPP-608/12-14

வேணு: 19 | மே 2014 | கானம் :10



Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar

NO FAME NO SELF INTEREST ONLY GOD NO NAME

ஸ்ரீ ஹரி:

தனி பிரதி Rs.10/-

# மதுரமுரளி

MADHURA MURALI

ஆண்டு சந்தா ரூ120/-

மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன்
வெளிவரும் தெய்வீக மாதப்பத்திரிக்கை



வேணு : 19 | மே 2014 | கானம் : 10

Delivered by India Post

www.indiapost.gov.in



மார்ச் 19-25 ஸ்ரீ கிருஷ்ணன் கோவில் – அம்பாசமுத்திரம் = ஸ்ரீமத்பாகவத பிரவசனம்




ஏப்ரல் 6 நாரத கானசபாவில் தர்ம ரக்ஷண சமிதி சார்பில்
சான்றிதழ் வழங்கும் விழா





ஏப்ரல் 6 திருமுல்லைவாயில் ஸ்ரீவைஷ்ணவி ஆலயத்தில் சத்சங்கம்



ஏப்ரல் 8 சென்னை ப்ரேமிகபவனத்தில் ஸ்ரீராம நவமி



மார்ச் 31 – யுகாதி பண்டிகை
-விட்டலாபுரம் ஸ்ரீபாண்டுரங்கன் கோவில்



மார்ச் 30 – ஸ்ரீஸ்ரீனிவாச கல்யாணம்
மஹாரண்யம் ஸ்ரீகல்யாண ஸ்ரீனிவச பெருமாள் கோவில்



ஏப்ரல் 12,13 – தாயில்பட்டியில் ராதாகல்யாணம் மற்றும் சிவகாசியில்
மஹாமந்திர கூட்டு ப்ரார்த்தனை



ஏப்ரல் 19,20 பெங்களூர் கல்கரே கிராம ஸ்ரீசுந்தர ஆஞ்சனேயர் கோவில்
– ப்ரதிஷ்டா தினம்







ஸ்ரீபெரும்புதூர் நாமத்வார் 6ஆம்ஆண்டு துவக்க விழா, வன்னியர் சத்திரம் – ஸ்ரீபெரும்புதூர் மார்ச் 30





ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு: 19 மே 2014 கானம்: 10

**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

**இந்த இதழில் ...**


| | | | |
|---|---|---|---|
| மதுரமான மஹனீயர்-218 | 03 | சனாதன புதிர் | 25 |
| ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 05 | பாலகர்களுக்கு ஒரு கதை | 26 |
| பாகவத பழம்- ஸ்க3 -ப12 | 07 | சத்சங்க செய்திகள் | 28 |
| அன்னமும் எண்ணமும் | 12 | பிருந்தாவனமும் நந்தகுமாரனும் | 29 |
| ஸ்ரீபெரும்புதூர் நாமத்வார் ஆண்டு விழா | 14 | மாலே மணிவண்ணா | 31 |
| வீடு தேடி வருவான் விட்டலன் | 21 | அப்பாலுக்கு அப்பால் | 34 |


**ஸ்ரீஹரிம் பரமானந்தம் உபதேஷ்டாரம் ஈஸ்வரம்**
**வ்யாபகம் ஸர்வலோகானாம் காரணம் தம் நமாம்யஹம்**

-- அபரோக்ஷானுபூதி

**பரம ஆனந்தமாக உள்ளவரும், சாக்ஷாத் ஆசாரியராகவும், ஸர்வேஸ்வரர் ஆகவும் விளங்குபவருமான, ஸ்ரீஹரியை நான் வணங்குகிறேன். அனைத்து உலகங்களிலும் மேவி நிற்பவரும், அவற்றிற்கு எல்லாம் காரணமாகவும் உள்ளவரும் அவரே.** - ஸ்ரீஆதிசங்கரர்

# ஸ்ரீஸ்வாமிஜியின் கீர்த்தனம்

*ராகம் : ஸ்ரீரஞ்ஜனி*

*பல்லவி*

என் செய்கை எல்லாம் நீ அறிவாய் என
எண்ணி இருந்தேன் - எந்நாளும் - கண்ணா

*அனுபல்லவி*

என் எண்ணம் பொய்யென என் மனதென்னை
ஏளனம் செய்து எள்ளி நகையாடுதே!


*சரணம்*

நான் வாழும் வாழ்க்கையும் செய்யும் செயல்களும்
பக்தியே இல்லாத பாழும் இப்பிறப்பும்
மனதின் கூற்றை மெய்ப்பிக்கின்றதே
வேதனை வேதனை வேறென்ன சொல்வேன்?

நீ அறிவாய் எனில் நான் இப்படி இருப்பதேனோ?
இருந்தால் நீ தான் இருக்கவும் விடலாமோ?
பொல்லாத மனதை அடக்கி ஆளாவிட்டால்
நல்ல தெய்வம் என் தெய்வம் என்றெப்படி உரைப்பேன்?

வாது செய்திட வரவில்லை நானிங்கு
வேதனையில் வரும் பேச்சென அறியாயோ?
சூதனையும் கள்வனையும் திருத்தி பணிக் கொள்வாயே!
அதமன் நானுனக்கு ஒரு சுமையோ?

முன் அட்டை:
மதுரபுரி ஆஸ்ரமத்தில் ஸ்ரீஸ்வாமிஜி
பின் அட்டை: மஹாரண்யம் கிராம அரசு பள்ளியில் ஆண்டு விழா - மாணவர்களுக்கு பரிசு வழங்குதல் ஏப்ரல் 8, 2014



# மதுரமான மஹனீயர் - 218

டாக்டர்.ஆ.பாக்யநாதன்

ஒருநாள் பாகவத பவனத்தில் நாங்கள் எல்லோரும் நாமம் சொல்லிக்கொண்டு இருந்தோம். ஸ்ரீஸ்வாமிஜியும் வந்து அமர்ந்தார்கள். "நாமம் கேட்கும் பெருமாளை" சுற்றி நாங்கள் எல்லோரும் அமர்ந்து கொண்டோம். ஸ்ரீஸ்வாமிஜி அவர்களும் எங்களுடன் சேர்ந்து நாமம் சொல்ல ஆரம்பித்தார்கள்.

அப்பொழுது ஸ்ரீஸ்வாமிஜியின் முகம் சற்றே மாறியது.

நாங்கள் ஸ்ரீஸ்வாமிஜியின் முகத்தை பார்த்து கொண்டே இருந்தோம். ஸ்ரீஸ்வாமிஜி எங்களை பார்த்து, "என்ன என்னையே பார்த்து கொண்டிருக்கிறீர்கள்" என்றார். நாங்கள் பதில் சொல்லாமல் இருந்தோம்.

"நான் பயத்துடனும் கவலையுடனும் காணப்படுகின்றேன். அதற்கான காரணம் என்னவாக இருக்கும் என்று நினைத்து நீங்கள் கவலைப்படுகின்றீர்கள். சரிதானே!" என்றார்கள். நாங்கள் எல்லோரும், "ஆமாம்" என்பது போல் தலையை அசைத்தோம்.

"என்னை சுற்றி பல பூதங்கள் வந்து அமர்ந்து கொண்டுள்ளன. அவைகள் என்னை பார்த்து பல விதத்திலும் பயமுறுத்தி கொண்டே இருக்கின்றது. நான் என்ன செய்வது?" என்று சொல்லி கண் கலங்கினார் ஸ்ரீஸ்வாமிஜி.

"நாங்கள் பூதங்கள் இப்பொழுது இந்த இடத்தில் வந்துள்ளதா" என்றோம். ஸ்ரீஸ்வாமிஜியும், "ஆமாம்" என்றார்கள்.

"இப்பொழுது நீங்கள் அவைகளை பார்த்து கொண்டிருக்கின்றீர்களா?" என்றோம். ஸ்ரீஸ்வாமிஜியும், "ஆமாம் பார்த்து கொண்டிருக்கின்றேன்" என்றார்.

உடனே எங்களில் ஒருவர் "இங்கே ஸ்ரீப்ரேமிக வரதன் ப்ரத்யக்ஷமாக உள்ளான். இங்கு எப்பொழுதும் வேத ஒலியும் நாம ஒலியும் கேட்டுக்கொண்டே உள்ளது. இந்த இடத்தில் எப்படி

பூதங்கள் இருக்கும்” என்றோம். “இந்த இடத்தில்தான் அந்த பூதங்கள் வரும்” என்றார். எங்களுக்கு ஒன்றுமே புரியவில்லை.

“ஒருக்கால் இறந்தவர்கள் யாராவது நல்ல கதி அடைய பூதமாக வந்துள்ளார்களா?” என்றோம்.

ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், "இல்லை. இந்த பூதங்கள் அடிக்கடி என் முன்னே வந்து என்னை பயமுறுத்தி கொண்டே உள்ளன" என்றார். எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. ஸ்ரீஸ் வாமிஜி தன்னை சுற்றி ஒவ்வொரு இடமாக காண்பித்து கொண்டு, “இங்கு அமர்ந்துள்ள பூதத்திற்கு ஜரை என்று பெயர்; வயதான காலம் வந்து விடும். அதற்குள் பகவானை பார்த்து விடு” என்று அந்த பூதம் பயமுறுத்தி கொண்டே உள்ளது என்றார்.

“மற்றொரு பூதம் இங்கே உள்ளது. அதற்கு வியாதி என்று பெயர். அதுவும் என்னை பயமுறுத்துகின்றது. மற்றொரு பூதத்தின் பெயர் துக்கம்; அதுபோலவே மரணம், விபத்து, பசி, தாகம், தூக்கம் என்ற பூதங்கள் எல்லாம் என்னை பயமுறுத்தி கொண்டே இருக்கின்றது".


“நாம் எப்படியாவது இந்த பிறவிக்குள் முக்தியை அடைந்து விட வேண்டும். இந்த பிறவிக்குள் நாம் முக்தி அடையா விட்டால், அடுத்தது மனித பிறவி வருமா என்று தெரியாது. அதுவும் எவ்வளவு ஆண்டுகள் கழித்து வருவோம் என்று தெரியாது. அப்பொழுது உலகத்தின் சூழ்நிலை எப்படி இருக்கும் என்று தெரியாது” என்று இப்படி சொல்லிக்கொண்டே போனார்கள்.

அதை கேட்டதிலிருந்து, அவ்வப்பொழுது, எங்களையும் அந்த பூதங்கள் பயமுறுத்தி கொண்டே உள்ளன.

---

**உலகத்தில் நீண்ட ஆயுளுடையவனோ, உயர் பதவி வகிப்பவனோ, அழகுடையவனோ, ஆரோக்யம் உடையவனோ உண்மையில் புண்யம் செய்தவன் ஆக மாட்டான். வாழும் வரையில் பாபம் செய்யாமல் வாழ்பவனே உண்மையில் புண்யம் செய்தவனாவான்.**

**- மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி**



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜீ அவர்களின் பதில்கள்

கேள்வி: தியானம் செய்யும் உருவத்தில் மனது லயமாகி உள்ளது என்பதை நாம் அறிந்து கொள்வதற்கு ஏதாவது அடையாளம் உள்ளதா?

பதில்: நாம் எந்த மூர்த்தியின் எந்த ஒரு உருவத்தை தியானம் செய்து வருகின்றோமோ, அந்த உருவத்தை ஒரு படத்திலோ அல்லது வேறு ஏதாவது விதத்திலோ எங்காவது காண நேர்ந்தால் நம்மை அறியாமலே உடலிலே ஒரு பரபரப்பு ஏற்படும். அப்படி ஏற்படுமானால், அந்த மூர்த்தியிடம் மனது லயமாகி இருக்கின்றது என்பதை ஒருவாறு உணரலாம்.

கேள்வி: ஒருநாள் நான் இறைவனிடம் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தேன். "என்னுடைய மனதில் நிறைய கெட்ட எண்ணங்கள் உள்ளன. நான் நிறைய தவறுகள் செய்துள்ளேன், பாவங்கள் செய்துள்ளேன், என்னை மன்னித்து விடு" என்று பிரார்த்தனை செய்தேன்.

உடனே என் மனது, "நாம் அப்படி எல்லாம் ஒன்றும் பெரியதாக தவறுகளோ, பாவங்களோ செய்து விடவில்லை. நாம் இப்படி பிரார்த்தனை செய்வதில் இருந்து நாம் எவ்வளவு பணிவுடன், தாழ்மையுடன் நடந்து கொள்கின்றோம்" என்று பெருமையாக இருந்தது.

உடனே, "அப்படி எல்லாம் இல்லை; நாம் உண்மையிலேயே நிறைய பாவங்களும், தவறுகளும் செய்துள்ளோம் நாம் பிரார்த்தனை செய்தது சரிதானே" என்று நினைத்தேன்.

உடனே என் மனது, "நாம் செய்த தவறுகளை ஒத்து கொள்வதற்கு ஒரு துணிவு வேண்டும்; அது நம்மிடம் உள்ளது" என்று பெருமை பட்டது . நான் என்ன செய்வது?

பதில்: "நான்" என்ற அகம்பாவத்தை நம்மால் விட முடியாது. பகவான்தான் நம்முடைய அகம்பாவத்தை போக்க வேண்டும். விடாமல் பிரார்த்தனையும் சரணாகதியும் செய்து வந்தால் போதும். மேலும், மனம் நம்மை எப்படி எல்லாம் ஏமாற்றுகின்றது என்பதை புரிந்து கொள்வதும் ஒரு பக்குவம்தான், அப்பொழுதுதான் நம்மால் அதிலிருந்து வெளியே வர வேண்டும் என்ற எண்ணம் வரும்.

கேள்வி: நாமாவை கூட ஏதோ சொல்கின்றேனே தவிர, அதில் எனக்கே திருப்தி இல்லையே ஏன்?

பதில்: முக்தியை அடைய வேண்டும் என்ற எண்ணம் தீவிரமாக இல்லாததே காரணம். "பகவானை பார்க்க வேண்டும் முக்தியை அடைய வேண்டும்" என்ற எண்ணம் எந்த அளவுக்கு தீவிரமாக உள்ளதோ, அந்த அளவுக்கு சாதனையும் தீவிரமாக அமையும்.

கேள்வி: முக்தியை அடைய வேண்டும் என்ற எண்ணம் தீவிரமாக ஆவதற்கு என்ன செய்ய வேண்டும்?

பதில்: அடிக்கடி மஹான்களுடன் சத்சங்கம் பழக வேண்டும்.




75 & 77, KG Marina Bay, Santhome High Road, Santhome, Chennai - 600 004
Phone: 044 - 42144662, 43033313, 43033326
contact@buddiesinfotech.com www.buddiesinfotech.com



# பாகவத பழம்

## ஸ்கந்தம் 2, அத்யாயம் 3

–ஸ்ரீ ஸ்வாமிஜி (12)



பாகவதர்களின் சங்கத்தால், ஒருவன் ஸ்ரீவிஷ்ணுவின் திட பக்தனாகி, தனது அனைத்து பூஜை பலன்களையும் பெற்றவனாகிறான்.

பகவத் கதைகளைக் கேட்டுக் கொண்டே இருப்பதாலேயே ஞானம் உண்டாகிவிடும். இந்தக் கதைகளை கேட்கக் கேட்க, மனதில் உள்ள அழுக்குகள் போகும்; இந்திரியங்கள் விஷயங்களின் பின் ஓடுவது நிற்கும்; காம குரோதாதிகள் விலகும். இவ்வாறு மன சுத்தியை பெற்றதாலேயே, ஒருவனுக்கு மனதில் நல்ல தெளிவு ஏற்படுகிறது. இந்தத் தெளிவால், மனம் மற்ற எல்லா விஷயங்களிலும், பற்றை முற்றிலுமாக விட்டு விடுகிறது. பின்பு, இதுவே அந்த மோக்ஷத்திற்கு மார்க்கமான பக்தியையும் கொடுத்துவிடுகிறது. இப்பேர்ப்பட்ட பெருமைகளுடைய ஹரி கதைகளை, உலகத்திலிருந்து விரக்தியடைந்த யார்தான் கேட்டு மகிழமாட்டார்கள்? என்று சுகர் கூறுகிறார்.

இந்த ஸ்ரீமத்பாகவதத்தைக் கேட்பதினால் மட்டுமே, மன மலங்கள் எல்லாம் நீங்கி, தெளிவு பிறந்து, வைராக்யம் அடைந்து, ஞானத்தையே பெற முடியுமானால், எந்த புத்திசாலிதான் இதை ஆச்ரயிக்க மாட்டான்? பகவந்நாம போதேந்திராள், மீரா, ஸ்ரீதரர், சைதன்யர், வல்லபர், ஆலங்குடி பெரியவா என்று எண்ணற்ற மஹான்கள் மூழ்கிய மஹா பவித்ரமான புராணம் அல்லவா ஸ்ரீமத்பாகவதம்! அதிலேயே நாமும் மூழ்கினால், நமக்கு எதுதான் துர்லபம்?

பகவானையே நமக்கு அளிக்கவல்லதாய் உள்ளது ஸ்ரீமத் பாகவத சிரவணம். விவேகியான ஒருவன், இதை எப்படி விட்டு வைப்பான்? சுகர் இவ்வாறு கூறியதாக, ஸூதர் சொல்லி முடிக்க, சௌனகர் ஸூதரைப் பார்த்து, மேலும் கேட்கிறார்.

சுகர் இவ்வாறு எல்லாம், ஹரி கதையின் மேன்மையை பற்றி எல்லாம் கூறியதை கேட்டு, பரீக்ஷித் அவரிடம், வேறு என்ன கேட்டார்? பரீக்ஷித் வேறு ஏதாவது கேட்டானா அல்லது பாகவதக் கதையை உடனே கேட்கத் தொடங்கினானா அல்லது வேறு ஏதாவது செய்தானா என்று, சௌனகாதிகளுக்கு சந்தேகம். அவர்கள் மேலும் கூறுகிறார்கள்.

"ஸூதரே! அங்கு என்ன நடந்தது என்பதை, எங்களுக்குச் சொல்லத் தகுதி உள்ளவராகிறீர். ஏனெனில், சாதுக்களுடைய சபையில் நிச்சயமாக ஹரி கதைதான் நடந்து இருக்கும் என்கிறார்கள். இரண்டு சாதுக்கள் சேர்ந்தாலே, அங்கு நிச்சயம் ஹரியைப் பற்றிய பேச்சுதான் இருக்கும். சுகரும், பரீக்ஷித்தும் சேர்ந்த இந்த இடத்திலும் ஹரிகதைதான் நடந்து இருக்கும். அதை தயவுசெய்து கூறுங்கள்" என்று சௌனகாதிகள் சூதரை பிரார்த்திக்கிறார்கள்.

ஹரிகதை என்பதாலேயே, அவர்கள் அதைக் கேட்க, ஆவல் கொள்கிறார்கள். வேறு கதையில், அந்த மஹரிஷிகளுக்கும் விருப்பமில்லை. பரீக்ஷித்தும் சுகரும் எப்பேர்ப்பட்ட சாதுக்கள், பாகவதர்கள் என்று சௌனகாதிகள் கூறுகிறார்கள்.

சிறு குழந்தையாய் இருக்கும்போதே, மற்ற பொம்மைகளையும் விளையாட்டையும் விட்டுவிட்டு, இந்த பரீக்ஷித், ஸ்ரீகிருஷ்ணனை பூஜை செய்வது, கிருஷ்ணனுக்கு தேர், அவனுக்கு புறப்பாடு, கோவர்த்தன லீலையை அனுகரணம் செய்வது, சிறு குழந்தைகளுடன் சேர்ந்து வெண்ணை பானை திருடி அனுகரணம் செய்வது, தாமோதர லீலையை அனுகரணம் செய்வது என்று இவைதானே அவனுடைய சிறு வயது விளையாட்டுக்கள்.

பாண்டு வம்சத்தில் பிறந்த இவன் சிறந்த பகவத் பக்தன். வியாச புத்திரரான சுகரும் சர்வக்ஞர், ஞானி. வாசுதேவனிடத்தில் அனன்ய பக்தி உடையவர். மேலும், ஸ்ரீசுகர், பகவத் விஷயங்களை எடுத்துக் கூறுவதில், மிகவும் சமர்த்தர். மனதில் பதியும் அளவு உருக்கமாக, பகவத் கதைகளை எடுத்துரைக்க வல்லவர்.

வையாஸகிஸ் ச பகவான் வாஸுதேவ பராயண:
உருகாயகுணோதாரா: ஸதாம் ஸ்யுர்ஹி ஸமாகமே 2:3:16

இந்த இரு மாபெரும் பக்தர்களின் சேர்க்கையில், அவசியம் கிருஷ்ணனின் கதைகள்தான் பேசப்பட்டிருக்கும். அதை கேட்க நாங்கள் மிகவும் ஆவல் கொண்டு உள்ளோம்.

ஆயுர்ஹரதி வை பும்ஸாமுத்யன்னஸ்தம் ச யன்னஸௌ
தஸ்யர்தே யத்க்ஷணோ நீத உத்தமஸ்லோகவார்தயா 2.3.17

வாழ்க்கையில் பகவானுடைய கதையைக் கேட்கும், அந்த கணங்களே, உண்மையாக வாழ்ந்ததாகும். சூரியன் உதித்துக்கொண்டும், அஸ்தமித்துக்கொண்டும், நமது வாழ்வில் எவ்வளவு நாட்கள் வீணாகிவிட்டன. பகவத் விஷயங்கள் இல்லாமல், செலவழிக்கப்பட்ட ஒவ்வொரு கணமும் வீணே! பகவத் கதைகளைக் கேட்காமல், வாழ்க்கையை வாழ்கிறவர்கள் தங்கள் வாழ்க்கை முழுவதையும் வீணடித்தவர்களே! ஏனென்றால், பகவான் நமக்கு மனிதப்பிறவியை ஞானத்தை அடையத்தான், அவனை அடையத்தான் அளித்துள்ளார். அதற்கு பிரயாசைப்படாத ஒவ்வொரு கணமும் நம் வாழ்க்கையில் வீணே!

தரவ: கிம் ந ஜீவந்தி பஸ்த்ரா: கிம் ந ஸ்வஸந்த்யுத
ந காதந்தி ந மேஹந்தி கிம் க்ராமே பஸவோSபரே 2.3.18

மரங்கள் ஜீவிக்கவில்லையா? துருத்தியும் புஸ் புஸ் என்று மூச்சு விடவில்லையா? நாய் முதலிய விலங்குகளும், சாப்பிட்டு குழந்தைகளைப் பெற்று எடுக்கவில்லையா? பகவத் கதைகளைக் கேட்காமல், ஒருவன் இவைகளைப் போல் வாழ்ந்தால் இவற்றிற்கும் இவனுக்கும் என்ன வித்தியாசம்?

எவனுடைய காதுகளில், ஸ்ரீகிருஷ்ணனின் நாமமோ, கதையோ, ஒரு முறை கூட விழவில்லையோ, அவன் நாய், பன்றி, கழுதை, ஒட்டகம் இவைகளுக்கு, நிகரான மனித வடிவில் உலாவரும் ஒரு மிருகமே ஆவான். காதிற்கு வைரத்தோடோ மாட்டலோ அழகில்லை. பகவத் கதை கேட்பதுதான் அழகு. பகவத் கதைகளைக் கேட்காத காதுகள், வெறும் ஓட்டைகளே. பகவானுடைய கதைகளைக் கூறாத நாக்கு, தவளையின் நாக்கிற்கு ஒப்பானது. தவளையின் நாக்கு என்று ஒரு பேச்சுக்குக் கூறவில்லை. தவளை என்ன செய்யும் தெரியுமா? நாக்கை வைத்துக்கொண்டு, சும்மாயில்லாமல் ஓயாமல் சப்தமிட்டுக்

கொண்டே இருக்கும். சும்மா இருந்தால், அது இருக்கும் இடம் யாருக்கும் தெரியாது. சப்தமிட்டு, சப்தமிட்டு தான் இருக்கும் இடத்தை ஆந்தைக்கும் பருந்திற்கும் தெரியப்படுத்திவிடும்".


"அதேபோல், பகவத் விஷயம் பேசாமல், வீணான பேச்சுக்களையே பேசிக்கொண்டு இருப்பவர்கள், யமனுக்கு தாங்கள் இருக்கும் இடத்தை தெரிவிக்கிறார்கள். பகவானை வணங்காத தலை கிரீடமும், பட்டு முண்டாசுடன் கூடியிருந்தாலும், வெறும் பாரமே. தலைக்குமேல் ஒரு கூடை வைத்தால், அது எப்படி ஒரு பாரமோ, அதேபோல் ஒரு சுமைதான், அச்சுதனை வணங்காத தலை. தங்கக் கங்கணங்களையே அணிந்து இருந்தாலும், பகவானுக்கு சேவை செய்யாத கைகள், வெறும் சவத்தின் கைகளே. பகவானின் திவ்யமங்கள விக்ரஹத்தைக் கண்டு ரசிக்காத கண்கள், மயில்பீலியில் இருக்கும் கண்களே. பகவான் வசிக்கும் க்ஷேத்திரங்களுக்கு செல்லாத, அவனது புறப்பாடுகளில் நடக்காத கால்கள் மரத்திற்கு ஒப்பானவையே! பாகவதர்களின் பாதத் தூளியை தரிக்காமல் இருக்கும், ஒரு மனிதன், உயிருடன் இருக்கும் பிணமே. மஹாவிஷ்ணுவின் திருவடிகளில் சமர்ப்பிக்கப்பட்ட துளசியின் கந்தத்தை எவன் அறியவில்லையோ, அவன் மூச்சு விடுகின்ற பிணம்தான். எந்த ஹ்ருதயமானது, பகவான் ஸ்ரீஹரியின் குணங்களையும் கேட்டு உருகவில்லையோ, அது ஒரு கல்போல் கடினமானது. எத்தனை நாமசங்கீர்த்தனம் செய்தும், எத்தனை கதைகள் கேட்டும், எத்தனை கோவிலுக்குச் சென்றும், என்ன செய்தும் மனது ஒரு முறை கூட உருகவில்லையோ, ஒரு உருக்கமான பிரார்த்தனை கூட செய்ய முடியாவிட்டால், அது ஒரு கடினமான கல்லிற்கு ஒப்பானதே! பகவந்நாமங்களையும் குணங்களையும் கேட்ட மாத்திரத்தில், ஒருவனுக்கு ஹ்ருதயம் உருகுமானால், அவன் கண்களிலிருந்து கண்ணீர் பெருகும், உடம்பு முழுவதும் மயிர் கூச்சலெறியும். அப்பா! பக்த சிரேஷ்டரான தாங்கள் மனதிற்கு இனிமையானதையே பேசுகிறீர்கள்".

"ஆத்மவித்தையில் ஸமர்த்தரான சுகர், பரீக்ஷித்திற்கு எதை உபதேசித்தாரோ, தயவு கூர்ந்து அதை எங்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்" என்று பிரார்த்திக்கின்றனர் சௌனகாதி ரிஷிகள்.

(கனியும்)

**செய்திகள்**

ஜனவரி 31லிருந்து ஏப்ரல் 8 வரை சென்னை ப்ரேமிகபவனத்தில் தினமும் 68நாட்கள் சுந்தர காண்ட பாராயணம் நடைபெற்றது. பூர்த்தி நாளான ஸ்ரீராமநவமி ஏப்ரல் 8 அன்று ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் ராமனை சிறப்பித்து அருளுரை வழங்கினார்கள். மார்ச் 30 அன்று மஹாரண்யம் ஸ்ரீகல்யாண ஸ்ரீனிவாச பெருமாள் கோவிலில் ஸ்ரீனிவாச கல்யாணம் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது. மார்ச் 31 யுகாதி அன்று ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் விட்டலாபுரம் ஸ்ரீபாண்டுரங்கனுக்கு கோவிலில் திருமஞ்சனம் செய்து தீர்த்த ப்ரசாதம் வழங்கினார்கள். மார்ச் 31முதல் ஏப்ரல் 6வரை ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளாணையின்படி மழைக்காக பிரார்த்தனை செய்து காலை 6முதல் மாலை 6வரை ஏழு நாட்கள் அகண்டமாக அன்பர்கள் ஹரே ராம மஹாமந்திர நாமகீர்த்தனம் சென்னை சப்தகிரி காலனியில் செய்தனர். சென்னை ப்ரேமிகபவனத்தில் மாலை முரளிஜி அவர்களின் சுந்தர காண்ட உபன்யாசமும் இடம்பெற்றிருந்தது.


ஸ்ரீ ஸுதர்சனா கேட்டரிங் சர்வீஸ்

நெ.1/273, பெருமாள் கோவில் தெரு, மணிமங்கலம், சென்னை - 601301

திருமணம், உபநயனம், கிரஹப்ரவேசம்
சீமந்தம் மற்றும் அனைத்து இல்ல
சுபநிகழ்ச்சிகளுக்கும் நல்ல முறையில்
தேவைக்கேற்ப செய்து தரப்படும்.

R.பத்ரி நாராயணன்
(கேட்டரிங் காண்ட்ராக்டர்)

97911 33001 / 89394 83949

Email: srisudarsanacatering24@gmail.com

# அன்னமும் எண்ணமும்

–ஸ்ரீபத்மபாதர்

இந்த சரீரமானது அன்னத்தாலே வளர்கிறது. அன்னத்தாலேயே போஷிக்கப்படுகிறது. அன்னத்தாலேயே ஜீவிக்கிறது. ஆன்மீக சாதகர்கள் முதலில் அன்னம் சாப்பிடுவதில் நியமத்துடன் இருப்பர். ஆஹாரத்தில் சாத்வீக, ராஜச, தாமச என மூன்று விதமான அன்ன வகைகள் உண்டு. அதில் சாதகர்கள் சாத்வீகமான ஆகாரத்தையே எடுத்து கொள்வர். அதையும் மிதமாகவே எடுத்து கொள்வர். அதிலும் சரியான சமயங்களில் உட்கொள்வதை கடைப்பிடிப்பர். மேலும் அந்த சாத்வீகமான அன்னத்தை கடவுளுக்கு படைத்து பிரசாதமாய் எடுத்து கொள்வர். இப்படி பழகும் சாதகர்கள், அப்படியே அன்னம் உட்கொள்வதின் அளவையும் குறைத்து கொள்வர். அன்னத்தின் அளவில் நியமத்தை கடைப்பிடித்து அதையும் படிப்படியாக குறைத்து கொண்டு வந்து, சுத்த சித்த சரீரம் பெற்று அன்னமே இல்லாமலேயே கூட வாழும் தன்மை பெறுவர்.

பிராணனானது மூச்சினாலேயே உடம்பில் தங்குகிறது. மூச்சினாலேயே ரக்ஷிக்கப்படுகிறது. ஆன்மீக சாதகர்கள் மூச்சை நியமத்துடன் கட்டுப்படுத்துகின்றனர். முதலில் நாடி சுத்தியையும், பின்னர் அதற்கும் மேலான பஹிர்முக, கேவல கும்பகத்தையும் முறைப்படி செய்து, மூச்சை கட்டுக்குள் கொண்டு வருகின்றனர். படிப்படியாக மூச்சின் எண்ணிக்கையை அவர்கள் குறைத்து கொண்டே வந்து, ஒரு மணிக்கு ஒரு மூச்சு என்ற அளவிற்கு கட்டுப்படுத்தி விடுவர். மூச்சு விடுவதில் இப்படி நியமமாய் இருந்து, வெகு நேரம் மூச்சு விடாமலேயே இருக்க சாதகர்கள் பழகி அதில் வெற்றியும் பெறுகின்றனர்.

அது போலவே மனமும் எண்ணங்களாலேயே உற்பத்தி ஆகிறது. எண்ணங்களாலேயே விருத்தி ஆகிறது. எண்ணங்களாலேயே ஜீவிக்கிறது. ஆன்மீக சாதகர்கள் எண்ணங்களை கட்டுப்படுத்துவது அவசியம். அதிலும் சாத்வீகமான எண்ணங்களையே வளர்த்து கொள்ள வேண்டும்.

அதிலும் குறிப்பாக இறைவனை பற்றிய சிந்தனைகளை அதிகரித்து கொள்ள வேண்டும். மெல்ல மெல்ல எண்ணங்களின் எண்ணிக்கைகளை குறைத்து கொண்டே வர வேண்டும். எண்ணங்களை கூர்ந்து கவனிப்பதால், எண்ணங்களின் எண்ணிக்கை குறையும். அப்படியே பழகி, கூர்ந்த கவனத்தினால் எண்ணங்களே இல்லாத நிலையை அடைய முடியும்.

இந்நிலையில், மனம் ஜீவிப்பதற்கு ஆதாரமான எண்ணங்களே இல்லாது, மனமே இல்லாத ஒரு நிலையில் வாழ முடியும். இதுவே முக்தி நிலை.

---

விதை ஒன்றை பார்க்கையில் அதற்கு உயிர் இருப்பதாக தோன்றாது. ஆனால் அதை ஒரு நல்ல செழிப்பான பூமியில் விதைத்து, நல்ல நீர் பாய்ச்சுவோமானால், அது நிச்சயமாக நல்ல பயிராக விளைந்தே தீரும்.

அதுபோலவே எல்லோரிடமும் பக்தி என்னும் விதை மனதினுள் இருந்தாலும் அது மறைந்து வெளிப்படாமல் இருக்கிறது. அந்த பக்தி விதையை சத்சங்கம் என்கிற செழிப்பான பூமியில் விதைக்க வேண்டும். அதில் குருக்ருபை என்கிற நல்ல நீரும் சேர்ந்தால்தான், மறைந்திருக்கும் பக்தியாகிய விதை, பயிராக வெளிப்படும். பின் அதில் வைராக்கியம் எனும் புஷ்பம் மலர்ந்து இறுதியாக ஞானம் எனும் பழமும் விளையும்.

- மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

---

பொதுவாக ஒரு மனிதன் வாழ்நாளில் கெட்டதை அதிகம் சம்பாதித்து கொள்கிறானா அல்லது நல்லதை அதிகம் சம்பாதித்து கொள்கிறானா என பார்த்தால் கெட்டதைத்தான் அதிகம் சம்பாதித்து கொள்கிறான் என தீர்மானமாக சொல்லிவிடலாம்.

- மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

# ஸ்ரீபெரும்புதூர் நாமத்வார்
# 6வது ஆண்டு விழா

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளாசிகளுடன் துவங்க பெற்ற பல நாமத்வார் மையங்கள் மக்களுக்கு அலாதியான நன்மையும் நிம்மதியும் தந்து வருகின்றன. அதில் ஒன்றான ஸ்ரீபெரும்புதூர் நாமத்வாரின் ஆறாம் ஆண்டு துவக்க விழாவை, அன்பர்கள் மார்ச் 30 அன்று கோலாஹலமாக கொண்டாடினர். ஸ்ரீஸ்வாமிஜி அவர்களே பங்கேற்று அருளாசிகள் வழங்கிய இவ்விழா ஸ்ரீபெரும்புதூரில் கலியன் ராமானுஜர் கூடம் எனும் வன்னியர் சத்திரத்தில் நடைபெற்றது.

இந்த ஆண்டு விழாவின் நிகழ்ச்சிகளில் பல குழந்தைகள் அழகாக பங்கேற்று நடித்தனர். ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனங்கள், நம் நாட்டு பாரம்பரிய நடனங்கள், ராமானுஜரின் கருணையை காட்டும் சரித்திர சம்பவ நாடகம், ராம நாமத்தின் மேன்மை, கிருஷ்ணனின் வெண்ணை திருடும் லீலை, பாரத சமுதாயம் எப்படி வேற்றுமைகளின் மத்தியிலும் ஒற்றுமையாக திகழ்கிறது என்பதை காட்டும் ஒரு கலை நிகழ்ச்சி, விடாமுயற்சியை காட்டும் ஒரு பெற்றோர் தம் குழந்தைக்காக **Lorenzo's Oil** கண்டுபிடிப்பது என பலவற்றை குழந்தைகளும் பெரியவர்களுமாக அரங்கேற்றி நடித்து காட்டினர்.

கோபகுடீரத்தின் மூலமாக எப்படி பாரம்பரிய பண்புகள் வளர்ந்து குழந்தைகளின் எதிர்காலத்திற்கு நன்மைகள் கிடைக்கிறது என்பதை குழந்தைகள் வாயிலாகவே எடுத்து காண்பிக்கப்பட்டது.

திரளான அன்பர்கள் வந்து கலந்து கொண்டு மகிழ்ந்தனர். ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் கலந்து கொண்ட அனைத்து குழந்தைகளுக்கும் பரிசுகள் வழங்கினார்கள். ஸ்ரீபெரும்புதூர் நாமத்வார் அமைய உறுதுணையாய் இருந்த "திருமால் அடிப்பொடி" திரு.பலராமன் மற்றும் விழாவிற்காக உழைத்த அன்பர்கள் அனைவர்களுக்கும் குழந்தைகளுக்கும் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் ஆசி கூறி விடைபெற்றார்கள்.

# Dr. Shriraam Mahadevan

**MD (Int Med), DM (Endocrinology)**
**Consultant in Endocrinology and Diabetes**
**Regn. No 62256**

## ENDOCRINE & SPECIALITY CLINIC

**New 27/1, Old 11/1, (Gr.Floor), 4th Cross Street,**
**R.K.Nagar, Mandaveli, Chennai - 600 028.**
**(Next to Krishnamachari Yogamandiram)**
**Tel: 2495 0090Mob: 94458 80090**
**E-mail: mshriraam@gmail.com,www.chennaiendocrine.com**
**www.chennaiendocrine.com**

rb

# rajmani builders

launches its new project

# "rajmani's mathura"

at kolapakkam (near Porur)

well designed and ventilated 2/3 bhk homes
(825 sq. ft to 1075 sq. ft) at fair prices

ph: 98400 30711 email: rajmanibuilders@gmail.com
ADVT
website: www.rajmanibuilders.com

**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



**Guruuram Consulting Private Ltd**

# வீடு தேடி வருவான் விட்டலன் - 3

## தொலைக்காட்சியில் பல்லாயிரக்கணக்கான உள்ளங்களை கொள்ளை கொண்ட ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளுரைகளின் தொகுப்பு

பண்டரியின் பெருமையை பற்றியும் பாண்டுரங்கனின் பெருமையையும் விரிவாக சொல்லி கொண்டு வந்த ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், பாண்டுரங்கன் பண்டரிக்கு ஏன், எப்படி வந்தான் என்பதை சொன்னார்கள்.

பண்டரியில் ஓடும் பீமா நதிக்கு பண்டரியில் மட்டும் சந்த்ரபாகா என்று பெயர். சந்திரனின் மூன்றாம் பிறை போன்று அந்த பீமா நதி பண்டரியில் வளைந்து ஒடுவதால் அதற்கு சந்த்ர - பாகா என்று பெயர். பக்தர்கள் சந்த்ரபாகாவை ஸ்லாகித்து பாடி உள்ளனர் என்ற ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், எப்படி பக்தர்கள் அதை பாடுகின்றனர் என்றவாறே மேலே கதை சொல்லிக்கொண்டு போனார்கள்.

“கங்கை, யமுனை, கோதாவரிக்கு எல்லாம் நான் போக மாட்டேன். எனக்கு சந்திரபாகா போதும். அதுவே சகல தீர்த்தமும் உள்ளடக்கியது. "சந்த்ரபாகா சர்வ தீர்த்த, மந்தர ஜப நாமகீர்த்த ஏக மூர்த்தி விடோபாயீ" - எனது வாசஸ்தலம் தேஹு என்ற ஊரானாலும், எனது நிஜ வீடு இருக்குமிடம் பண்டரீபுரம் தான். எனக்கு ஒரு சகோதரி இருக்கிறாள். அவள் பெயர் சந்திரபாகா" என்று துக்காராம் ஸ்வாமிகள் தனது மனைவியிடம் சொல்கிறார். எப்படி கஸ்தூரி ரங்கா எனும்பொழுதே காவேரி ரங்கா என்று ரங்கநாதனை சொல்வது தவிர்க்க முடியாதோ, அப்படி விட்டலனையும், சந்திரபாகாவை சொல்லாமல் சொல்ல முடியாது.

தமிழ்நாட்டு பக்கத்தில் உள்ள ஒரு ஊரில்தான் புண்டலீகன் என்ற பக்தன் பிறந்தான். அவனுக்கு ஒரு வயதான பெற்றோரும், மனைவியும், குழந்தைகளும் இருந்தனர். இந்த புண்டலீகன் சாதுவானவன். ஹரிகதைகளை விரும்பி கேட்பான். உபன்யாசங்களை கேட்க அவனுக்கு பிடிக்கும்.

உபன்யாசங்களை கேட்பதில் பெரிய லாபம் உண்டு. இந்த அவசர யுகத்தில், வேலை வேலை என்று அலைபவருக்கு, நல்ல

புத்தகங்கள் கிடைத்தாலும், அவற்றை படிக்க அவகாசம் இராது. படித்தாலும் ஆழமாக படித்து உணர முடியாது. ஆனால் புராண உபன்யாசம் செய்கிறவருக்கு அதுதான் ஜீவனம்; அவர் அதை நன்றாக கரைத்து குடித்திருப்பார். அதில் உள்ள சாரத்தை அப்படியே அழகாக எடுத்து சொல்லி விடுவார். மிகவும் கஷ்டப்பட்டு கற்க வேண்டிய பல விஷயங்களை ஒருவர், உபன்யாசம் கேட்பதால் மிக சுலபமாக தெரிந்து கொள்ள முடியும். புண்டலீகன் அப்படி அருமையாக உபன்யாசம் சொல்லக்கூடிய ஒருவரின் கதைக்கு போயிருந்தான். கதை சொல்பவர்கள் தாங்கள் சொல்லும் ஸ்வாமியை உயர்த்தி பேசுவார்கள். அந்தந்த தலம், தீர்த்தத்தையும் உயர்த்தி பேசுவார்கள். அப்படித்தான் அன்று பௌராணிகர் பேசிக்கொண்டு இருந்தார்.

பாரதத்தின் பெருமை என்பது சொல்லிற்கு அடங்கவே அடங்காதது. பகவானின் பத்து அவதாரங்கள் இங்குதான் நிகழ்ந்தன. பகவான்தான் இங்கு அவதாரம் எடுத்தான் என்றில்லை; எத்துனை மஹான்கள் இங்கு வந்திருக்கின்றனர்! ஆதிசங்கரர், ராமானுஜர், மத்வாச்சாரியார் போன்று சித்தாந்தம் ஸ்தாபிதம் செய்த மஹனீயர்களும் இங்கு தான் பிறந்தனர். அப்படியே இமயமலையில் ஆரம்பித்து இராமேஸ்வரம் வரை எத்தனை மஹான்கள். வங்காளத்தில் சைதன்யர், ராமகிருஷ்ணர், அரவிந்தர், தாகூர் போன்றோர், குஜராத்தில் நரசிம்ம மேத்தா, பஞ்சாபில் குரு கோவிந்த சிங், குருநானக் போன்றோர், உத்திர பிரதேசத்தில் ஸ்வாமி ஹரிதாஸ், ராஜஸ்தானில் மீரா, பிருந்தாவனத்திலும், மஹாராஷ்டிரத்திலும் அநேக பக்தர்கள், கர்நாடகத்தில் புரந்தரதாசர், வியாசராயர், கனகதாசர் போன்ற மஹான்கள், ஆந்திராவில் பத்ராசலம் ராமதாசர், போதண்ணா போன்றோர், தமிழ்நாட்டிலேயே மட்டும் எடுத்துக் கொண்டால் கூட ஆழ்வார்கள், நாயன்மார்கள் என்று எண்ணற்ற மஹான்கள் அனைவரும் பாரத பூமியில்தான் பிறந்து வாழ்ந்தனர். இந்த பட்டியல் நீண்டு கொண்டே இருக்கிறது. வந்த மஹான்களின் பட்டியல் சொல்வதற்கே நேரம் போதாது. அப்படி ஒரு ஞானியர் கூட்டத்தை வாழையடி வாழையாக தந்து கொண்டிருப்பது பாரத பூமி. வேறு எந்த பூமியிலும் இப்படி மஹான்கள் தோன்றியது

கிடையவே கிடையாது. பாரத மாதா மஹான்களாகவே பெற்றெடுப்பாளாம். மஹான்கள் விளையும் பூமி இது.

இதையும் தவிர பாரதத்திற்கு மற்றொரு பெருமை உண்டு. இங்குதான் எத்தனை தீர்த்தங்கள்! இந்த தீர்த்தங்களுக்கு யாத்திரை செல்வோர், அந்தந்த தீர்த்தங்களில் நீராடியவுடன், அவர்கள் அதுவரை செய்த பாபங்கள் அனைத்தும் அழிந்து விடுகிறது என்று மஹரிஷிகள் சொல்லி உள்ளனர். அவர்கள் வாக்கு எப்படி பொய்யாக முடியும்? வேறு எந்த நாட்டில் உள்ள எந்த ஒரு நதியிலும், தீர்த்தத்திலும் குளித்தால் பாபங்கள் போகும் என்று எந்த மஹரிஷியும் சொல்லவே இல்லை. யாத்திரை நாம் செல்கையில் எந்த தீர்த்தங்களில் ஸ்நானம் செய்கிறோமோ செய்த உடனேயே அது வரை செய்த பாபம் ஒடி விடும். அப்படித்தான் ரிஷிகள் சொல்லி உள்ளனர். அவர்கள் வாக்கு ஒரு ப்ரமாணம்தானே? இப்படி பாரதத்தில் உள்ள தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தால் பாபம் போகும்; புண்யம் பெருகும்; நற்சிந்தனைகள் வளரும்; சித்தம் சுத்தியாகும். பகவானின் அவதாரங்கள், மஹான்களின் அவதாரங்கள், தெய்வத் தீர்த்தங்கள், பாரதத்தில் இருக்கும் மஹா க்ஷேத்திரங்கள், மஹா பக்தர்களால் அபிமானமாக கொண்டாடப்பட்ட க்ஷேத்திரங்கள், 51 சக்தி பீடங்கள், 108 திவ்ய தேசங்கள், 12 ஜோதிர் லிங்கங்கள் என்று மேலும் பாரதத்தைப் பற்றி சொல்லிக்கொண்டே போகலாம். ஒவ்வொரு க்ஷேத்திரம், தீர்த்தத்திலும் சம்பந்தப்பட்ட பக்தர்கள், அவர்களது சரித்திரம் என்று பெருமை படைத்த பாரதத்தை பற்றி, அன்று ஹரிகதை சொன்ன உபன்யாசகர் மிக அழகாக புண்டலீகன் மனதில் பதியும்படி பேசினார்.

சப்த மோக்ஷபுரிகள் கொண்ட இந்த பாரதத்தில் பிறவி கிடைப்பது கடினம். மனிதனாய் பிறப்பதே அரிது. அதிலும் உடலில் எந்தவித ஊனமும், மனதில் குறையுமின்றி பிறப்பது மிக அரிது. அதிலும் பெருமை வாய்ந்த பாரதத்தில் பிறவி கிடைப்பது அரிது. பல கோடி மனித பிறவிகள் எடுத்தபின்னர்தான் ஒருவனுக்கு ஞானம் பிறக்கிறது என்று பகவானே சொல்கிறான்.

அப்படிப்பட்ட துர்லபமான மனித பிறவி எடுத்த ஒருவன், அங்கங்களும் அறிவும் சரியாக அமைந்து, வீணாக வாழ்நாளை கழிக்காமல் மஹான்களையும், தீர்த்தங்களையும் சேவிக்க வேண்டும் என்று நினைப்பது அரிது. அப்படி ஒருவன் நினைத்தாலும் அவனுக்கு அது கைகூட வேண்டுமென்றால் ஒரு உத்தம குரு அந்த காலத்தில் அவன் அருகாமையில் வாழ வேண்டும். அப்படி இருந்தும் அவரை அணுகி ஆஸ்ரயிக்க வேண்டும் என இவனுக்கு தோன்ற வேண்டும். "மனுஷ்யத்வம், முமுக்ஷுத்வம், மஹாபுருஷ சம்ஸ்ரயம்" என்கிறார் ஆதிசங்கரர் விவேக சூடாமணியில். இப்படி மனித பிறவி, முக்தியில் ஆசை, உத்தம குருவின் சங்கம் ஆகியவை கிடைக்க ஒரு மனிதன் மஹாபாக்யம் செய்து இருக்க வேண்டும் என்று ஆதிசங்கரர் சொல்கிறார். இதை எல்லாம் அந்த உபன்யாசகர் அழகாக சொல்லி கொண்டு வந்தார்.

மேலும் சப்த புண்ய நதிகளிலேயே மிக உயர்ந்தது கங்கை. அந்த கங்கை ஹரித்வார், ரிஷிகேசத்தில் இருப்பதைக் காட்டிலும், காசியில் இருக்கையில் அதன் பெருமை கூடுகிறது. ஏனெனில் க்ஷேத்திரங்களில் உயர்ந்தது காசி. நதிகளில் உயர்ந்தது கங்கை. இரண்டும் - காசி, கங்கா - இரண்டும் சேர்ந்த இடமான காசியில் கங்கையில் ஸ்நானம் செய்ய வேண்டும். தவறு செய்யக்கூடாது என்று நினைத்தாலும், இந்திரியங்கள் ஒரு மனிதனை மயக்கடித்து, தவறு செய்ய வைக்கின்றன. இதில் இருந்து தப்பிக்க எளிதான பிராயச்சித்தங்களை மஹரிஷிகள் தெரிவிக்கிறார்கள். அதில் ஒன்று தீர்த்த ஸ்நானம். மோக்ஷபுரிகளில் உயர்ந்த காசியில், நதிகளில் உயர்ந்த கங்கையில் நீராடுவது உயர்ந்தது என்று உபன்யாசகர் மிகவும் அழகாக எடுத்து பேசினார். இதை கேட்டு வீடு திரும்பிய புண்டலீகனுக்கு, வேறு எதுவுமே ஓடவில்லை. (தொடரும்)

**Announcement**

**To know about Sri Swamiji's Darshan Timings, Events & also to Register your Prayers, Please call +91-9382393833**

## சனாதனப்புதிர் பகுதி 61 - <u>கேள்விகள்</u> - ஆத்ரேயன்

1. ஹம்ஸம் - அன்னப்பறவை - பாலை மட்டும் குடித்து விட்டு தண்ணீரை விட்டு விடும். இதை எந்த வேதம் குறிப்பிடுகிறது? இதிலிருந்து ஒரு தத்துவமும் வெளிப்படுகிறது. அது என்ன தத்துவம்?
2. இத்மவாஹர் யார்? இவரை யார் ஸ்வீகாரம் எடுத்து கொண்டார்?
3. இப்பொழுது தேவலோகத்தை ஆளும் இந்திரனின் பெயர் என்ன?
4. இதிஹாசங்கள், புராணங்கள் என்ற வார்த்தைகள் வேதத்தில் காணப்படுகின்றனவா?
5. ஜாபால உபநிஷத்/ ஜாபாலி உபநிஷத் இவை ஒன்றா (அ) வேறா?
6. விஷ்ணுவின் பத்து அவதாரங்களில் 8 சுக்ல பக்ஷத்தில். ஒன்று கிருஷ்ண பக்ஷம், ஒன்று பௌர்ணமி. கிருஷ்ண பக்ஷம் மற்றும் பௌர்ணமியில் அவதரித்தவர்கள் யார்?
7. ஸ்துலசிரஸ் என்ற முனிவரால் சபிக்கப்பட்டு இந்திரனுடைய வஜ்ராயுத்தால் தாக்கப்பட்ட விஸ்வாவஸு என்ற கந்தர்வன் என்ன ஆனான்?
8. அனஸூயா, அருந்ததி, க்யாதி -இவர்களின் உறவு முறை என்ன?
9. கார்த்தவீர்யார்ஜுன் ஜமதக்னியிடம் எதை கேட்க, அவர் மறுத்ததால் அவரை கொன்றான்?
10. மதுமதி என்று எதை கூறுகிறார்கள்?

### விடைகள்

1. சுக்ல யஜுர்வேதம் - 19.73 ஹம்ஸ க்ஷீரந்யாஸம் - நல்லதை எடுத்து கொள்; கெட்டதை விட்டு விடு.
2. அகஸ்த்யா - லோபாமுத்ரையின் பிள்ளை; த்ருடாஸ்யு என்று பெயர்; இத்மவாஹு காரண பெயர். இரது என்ற முனிவர் இவரை ஸ்வீகாரம் செய்து கொண்டார்.
3. புரந்தரன்.
4. ஆம்; அதர்வ வேதம் - 15.6.4. சதபத ப்ராஹ்மணம் 13.4.3.12; ப்ரஹதாரண்ய உபநிஷத் 2.4.10.
5. இரண்டும் வேறு. ஜாபால உபநிஷத் - அதர்வ வேதம்; ஜாபாலி உபநிஷத் - சாம வேதம் - சைவ உபநிஷத்;
6. வைசாக பௌர்ணமி - கூர்மாவாதாரம். ச்ராவண க்ருஷ்ண அஷ்டமி - க்ருஷ்ணாவதாரம்.
7. தலையில்லா கபந்தன் என்ற அரக்கனாக உருப்பெற்றான். தண்டகாரண்யத்தில் ராம, லக்ஷ்மணர்கள் அவனது கைகளை வெட்ட ராமனால் சாப விமோசனம் பெற்றான்.
8. மூவரும் சகோதரிகள்; கர்தமருக்கு பிறந்த பெண்கள். அனசூயா அத்ரி முனிவரையும், அருந்ததி வசிஷ்டரையும், க்யாதி ப்ருகுவையும் மணந்தார்கள்.
9. கபிலா என்கிற பசு. காமதேனு, நந்தினிக்கு ஒப்பானது.
10. 'மதுவாதா ருதாயதே - மாத்வீர் காவோ பவந்து ந:' - என்ற 3ரிக் - ரிக்வேதம் 1-90. 6-8.

# பாலகர்களுக்கு ஒரு கதை



## எஜமான விசுவாசம்!

மாதவன் உயர்நிலை பள்ளி மாணவன். அவனுக்கு அன்பான பெற்றோர்கள் இருந்தனர். அவனது நெருங்கிய நண்பன் பாலன் வீட்டிற்கு அவன் அடிக்கடி செல்வான். அப்படித்தான் அன்றும் அவன் போய் கொண்டிருந்தான். வழியில் ஒரு ஆலயம். அதில் ஒரே கூட்டம். மாதவனுக்கு ஒரே வியப்பு! அன்பான பெற்றோர்களும் நண்பனும் இருக்க, எதற்கு தெய்வமும், பக்தியும் என்று அவன் நினைத்தான். அப்படியே நினைத்தவாறு பாலன் வீட்டுக்கு போய் விட்டான்.

பாலனின் வீடு பெரியது. அங்கு சமைப்பதிலிருந்து வீட்டிற்கு காவல் வரை எல்லாவற்றிற்கும் பல வேலையாட்கள் இருந்தனர். வீட்டில் மார்ஷல் என்ற ஒரு அழகான நாய் இருந்தது. அதை பார்த்து கொள்ள கூட பல வேலையாட்கள் இருந்தனர். மாதவன் போனபொழுது அந்த நாயை குளிப்பாட்டி கொண்டிருந்தார் ஒருவர். அவர் புதிதாக ஏதோ ஒரு கவரை பிரித்து அதிலிருந்து எதையோ எடுத்து நாயின் அருகில் வைத்தார். மாதவன் என்ன அது என்று கேட்டான். பாலன் "அதுவா! அது நாய்க்கான விலை உயர்ந்த சோப். என் தந்தை இதைத்தான் உபயோகப்படுத்த சொல்வார்" என்றான். நாய் குளிக்கும் வரை அமைதியாக இருந்தது. அதை துவட்டி விட்டார் அந்த வேலையாள். மறுகணம் அது கிடுகிடுவென ஓடியது. மற்றொருவர் மார்ஷலுக்காக உணவுடன் நின்று கொண்டிருந்தார். சுத்தமான தட்டில் அதை வைத்து சாப்பிட சொன்னார். மார்ஷல் அதை சாப்பிட்டவுடன், அவர் தண்ணீரை வைத்தார். அது அதை குடித்தது. மற்றொருவர் வந்து நாயின் கழுத்தில் ஒரு பெல்டை கட்ட மார்ஷலும் குனிந்து தன் கழுத்தை காட்டியது. மாதவன் "இவர் யார்? அவரிடம் அமைதியாய் கழுத்தை காட்டுகிறது" என்றான். பாலன் "இதுவும் என் அப்பாவின் ஏற்பாடுதான். அதை தினமும் இவர் வாக்கிங் கூட்டி போவார்" என்றான். மாதவன் "ஜாலியாக உன் வீட்டில் நாய் இருக்கிறது" என்றான்.

சிறிது நேரம் கழித்து பாலன், "சத்தம் கேட்கிறது.

இரண்டு மாதம் முன் வெளியூர் சென்ற என் தந்தை இன்றுதான் வருகிறார்'' என்று எழுந்தான். அதற்குள் அவன் தந்தை உள்ளே வந்திருந்தார். அதே சமயம் வாக்கிங் போன மார்ஷல் திரும்பி வந்தது. அது பாலனின் தந்தையை பார்த்த மறுகணம் வாக்கிங் கூட்டி சென்றவரின் பிடியிலிருந்து விடுபட்டு பாலனின் தந்தையை நோக்கி ஓடியது. அதற்கு சாப்பாடு போட்டவரும் குளிப்பாட்டியவரும் அங்கிருந்தனர். அவர்களை அது கண்டு கொள்ளவே இல்லை. பாலனின் தந்தை மேலே விழுந்து, கையை காலை ஆட்டியது. அவர் காலை மோப்பம் பார்த்து கொண்டே இருந்தது. வாலை பலமாக ஆட்டியது. மெலிதாக சப்தம் செய்தது. அங்கும் இங்குமாக குதித்தது எனினும், அது பாலனின் தந்தையை விடவே இல்லை. அது அப்படி செய்ததில் இருந்தே அதற்கு பாலனின் தந்தையின் மேலிருந்த அன்பு தெளிவாக தெரிந்தது. அவரும் அதன் தலையை தட்டினார். கழுத்தை, முதுகை தடவினார். நாய் அவரை பார்த்தது. எனக்கு வேலை இருக்கிறது என்று அதனிடம் பேசினார். அது அவரை விட்டு விலக ஆசையில்லாமல் விலகியது.

அதை பார்த்த மாதவனுக்கு ஆச்சரியம். ''என்ன இது? இத்தனை பேர் அதற்கு வரிந்து கட்டி வேலை செய்கின்றனர். அவர்களிடம் எல்லாம் இந்த மார்ஷல் கொஞ்சமும் பிரியம் காட்டவில்லை. உன் தந்தை அதற்கு எந்த வேலையும் செய்யவில்லை. அவரோ இரண்டு மாதமாக இங்கு இல்லவே இல்லை. அவர் அதனை அதிக நேரம் கொஞ்சவும் இல்லை. ஆனால் அவரிடம் போய் பிரியம் காட்டுகிறது'' என்றான். பாலன் உடனே ''அதற்கு யார் எஜமானன் என்று நன்றாக தெரியும். யார் ஆணைக்கு கட்டுப்பட்டு இந்த வேலைக்காரர்கள் எல்லாம் தன்னிடம் பிரியமாய் இருக்கின்றனர் என்று அதற்கு தெரியும்'' என்றான். மாதவனுக்கு ஒரே ஆச்சரியம்.

திரும்பி செல்கையில் அதே கோவிலை பார்த்தான் மாதவன். அவன் மனதில் ஒரு மின்னல்! அடடா! இந்த தெய்வம் அல்லவா இந்த உலகை படைத்து, நல்ல தாய், தந்தையரையும், நண்பர்களையும் நமக்கு தந்து இருக்கிறது. மார்ஷல் அதன் எஜமானரிடம் பிரியமாய் இருப்பதை போல், நாமும், நமக்கு எஜமானரான தெய்வத்திடம் பிரியமுடன் பக்தி காட்ட வேண்டுமல்லவா என்று நினைத்தான். மார்ஷல் நடந்து கொண்டது அவனுக்கு ஒரு குரு உபதேசம் போலானது. மௌனமாய் கோயிலுக்குள் பக்தியுடன் நுழைந்தான்!

**மார்ச் 19 - 25** அம்பாசமுத்திரம் ஸ்ரீகிருஷ்ணன் கோவிலில் திரளான அன்பர்கள் முன் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் ஸ்ரீமத் பாகவத ப்ரவசனம் செய்தருளினார்கள். காலை பாகவத பாராயணம் செய்யப்பட்டது.

**ஏப்ரல் 6** சென்னை நாரத கான சபாவில் தர்ம ரக்ஷண சமிதியின் சார்பில் நடந்த சான்றிதழ் வழங்கும் விழாவில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் சமிதியின் செயல்பாடுகளை சிறப்பித்து பேசி, மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கினார்கள். இதில் தர்ம ரக்ஷண சமிதியை சேர்ந்த ஸ்ரீகுருமூர்த்தி மற்றும் சாஸ்த்ரா பல்கலைக்கழக டீன் டாக்டர் வைத்யசுப்ரமண்யம் ஆகியோர் கலந்து கொண்து குறிப்பிதக்கது.

**ஏப்ரல் 6** சென்னை திருமுல்லைவாயில் ஸ்ரீவைஷ்ணவி ஆலயத்தில் நடைபெற்ற சத்சங்கத்தில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் கலந்து கொண்டு அருளுரை வழங்கினார்கள்.

**ஏப்ரல் 8** மஹாரண்யம் அரசு பள்ளியின் ஆண்டு விழாவில் கலந்து கொண்டு ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் மாணவர்களுக்கு ஆசிகளும் பரிசுகளும் வழங்கினார்கள்.

**ஏப்ரல் 12, 13** சிவகாசி அருகே தாயில்பட்டி கம்மவார் கல்யாண மண்டபத்தில் ஸ்ரீஸ்வாமிஜி எழுநூறு அன்பர்கள் முன்பாக ஒரு மஹாமந்திர கூட்டு பிரார்த்தனையை நிகழ்த்தினார்கள். தாயில்பட்டியில் இருநாட்களுமாக நடந்த ராதாகல்யாணத்திலும் கலந்து கொண்டார்கள். 13ஆம் தேதி மாலை சிவகாசி அரசன் கல்யாண மண்டபத்தில் சுமார் ஆயிரம் அன்பர்கள் கலந்து கொண்ட சத்சங்கத்தில் அருளுரை வழங்கி ஜய வருட ஆசீர்வாதங்களையும் தந்தருளினார்கள்.

**ஏப்ரல் 19, 20** பெங்களூர் கல்கரே கிராம ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் ஆலயத்தின் பிரதிஷ்டாதின வைபவத்தில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் ஸ்ரீசுந்தர ஹனுமானுக்கு சிறப்பு திருமஞ்சனம் செய்தார்கள். ராமாயண பாராயணத்தில் கலந்து கொண்டு, அருளுரையும் வழங்கினார்கள். மாலை ஸ்ரீஹனுமான் புறப்பாடு கண்டருளினார்.

**ஏப்ரல் 14** மஹாரண்யம் ஸ்ரீகல்யாண ஸ்ரீனிவாச பெருமாள் கோவிலில் 500அன்பர்களுக்கு, திருமணம் கைகூட சிறப்பு பிரார்த்தனை நடைபெற்றது. மாலை ஜயஹனுமான் சன்னதியில் லக்ஷ தீபம் ஏற்றப்பட்டது. 3000 அன்பர்கள் ஜயஹனுமானையும், ஸ்ரீகல்யாண ஸ்ரீனிவாச பெருமாளையும் தரிசித்து சென்றனர்.

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்



- ஜனனி

## ஸ்ரீபக்த கோகில்ஜீ -5

ஸீதையின் துக்கத்தில் மூழ்கி கோகில்ஜி பாவமய குயில் ரூபத்தில் ஸ்ரீராமரிடம் கூறுவதன் தொடர்ச்சி -

அவளுடைய விரஹ வேதனையை கண்டு பசு பக்ஷிகளும் அழுது விடுகின்றன. கல்லும் கரைகின்றது. அப்படி இருக்கையில், மிகவும் கோமளமான தாங்கள் எப்படி இவ்வாறு கடுமையாக உள்ளீர்கள்?

இன்றும் மக்களின் அபவாத சொற்களுக்கு நீர் பயப்படுகிறீரா? அய்யோ! ஸ்வாமினியின் துக்கத்தை நான் எவ்வாறு போக்குவேன்? என்ன வ்ரதமோ, தவமோ செய்து நான் ஸரஸ்வதி ரூபமாகி, மக்களின் நாவிலமர்ந்து பரமபாவனமான ஸதீ சிரோமணியான என்னுடைய ஸீதையின் குணங்களை பாடுவேன்?

இவ்வாறு பல விதமாக புலம்பி அவர் பாவத்தில் மூர்ச்சையாகிவிடுவார். அவருடைய இந்த அவஸ்தை சுமார் பதினேழு வருடங்களுக்கு இருந்தது. இந்த நிலமையில் அவருக்கு உணவு-நீர் போன்ற நினைவுகள் அடியோடு இல்லாமல் போயின. சாப்பாடு முன்பு வைத்திருந்த போதிலும், அவருக்கு அதை எடுத்து உண்ணும் எண்ணமே இருக்காது. கண்களிலிருந்து கண்ணீர் பெருகியவாறு இருக்கும். அருகிலிருக்கும் சிஷ்யர் வாயில் சிறிது திணித்தால், அது பழக்கத்தினால் தொண்டையின் கீழ் இறங்கும், ஆனால் நடக்கும் எதுவும் அவருக்கு சிறிதும் தெரியாது. 'ஸியாராம்' 'ஸியாராம்' என்று கண்ணீர் பெருக்கொடு ஜபித்துக் கொண்டேயிருப்பார்.

இந்த நிலை வெகு காலம் நீடித்த பின்பு அவருக்கு ஒரு திவ்ய காட்சி ஏற்பட்டது. அதில் ஸ்ரீராமரும் ஸீதையும் யுகளமாக அவருக்கு காட்சியளித்தார்கள். ஒரு கல்பக வ்ருக்ஷத்தின் கீழ் திவ்யமான ரத்ன மண்டபத்தில் மணிமயமான ஆஸனத்தில் யுகளம் வீற்றிருப்பதையும், அவர்கள் இவரிடம் - "கோகிலே! நீ ஏன் இவ்வளவு

விசனப்படுகிறாய்? நாங்கள் இருவரும் எப்பொழுதும் சேர்ந்தேதான் இருக்கிறோம். வியோகம் என்பது ஒரு வெளி லீலை மட்டுமேயாகும்" என்று கூறினார்கள்.

இதன்பின் கோகில்ஜியின் வேதனை சற்று குறைந்தது. அவர் அவ்வப்பொழுது அவத தேசம் செல்வார். ஒரு முறை இப்படி அவத தேசம் சென்று திரும்புகையில் அவர் ப்ருந்தாவனம் சென்று அங்கேயே நிரந்தரமாக வஸிக்கலானார்.

'ஸீதா ராமரை உபாஸனை செய்யும் கோகில் பாபா எதற்கு ப்ருந்தாவனத்தை தனது நிரந்தர இருப்பிடமாக தேர்ந்தெடுத்தார்? விஷயம் என்னவென்றால், ஜானகி தேவியின் இரண்டாவது வனவாஸம் அவரது ஹ்ருதயத்தில் ஆழ்ந்த பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. அயோத்தியில் நுழையும் பொழுதெல்லாம் அவருடைய ஹ்ருதயத்தில் உள்ள ரணம் பசுமையாகிவிடும். இந்த அயோத்தி மக்களின் அபவாதத்தினால்தான் எனது ஸ்வாமினி காட்டிற்கு சென்று துக்கம் அனுபவிக்கும்படி நேர்ந்தது' என்று எண்ணுவார்.

பக்த கோகில்ஜி பக்தர்களின் ஆக்ரஹத்தினாலேயே அயோத்யா செல்வார். அங்கு சென்றாலும் மிகவும் ஸங்கோசத்துடனேயே தங்குவார். 'ரவிகுலதிலகமான மஹாராஜ ஸ்ரீராமசந்த்ரமூர்த்தி மிகவும் தார்மீகமான சக்ரவர்த்தி. அவருடைய தேஜஸ் மற்றும் ப்ரதாபத்தினாலேயே இம்மூவுலகும் கட்டுபட்டு கோப்புடன் நடக்கின்றது. அவரது தலைநகரில் எவ்வித தவறும் செய்துவிடக் கூடாது' என்று அவர் எண்ணுவார்.

அவர் அடிக்கடி, "ஸ்ரீஅயோத்யா ஐஸ்வர்ய பூமி. வ்ரஜமோ மாதுர்ய பூமி. அங்கு, தர்மமே முதன்மை பெறும். இங்கோ, ரஸம் மற்றும் ப்ரேமைக்கே ப்ரதான்யம். அங்கு, புகழுக்கே முக்கியத்துவம். இங்கோ, இகழுக்கே முக்கியத்துவம். அங்கு, பகவான் மக்களிடமிருந்து வரி வஸூலிப்பான். இங்கோ, அவன் எல்லோரிடமிருந்தும் திருடுவான். அயோத்தியில், பகவான் கொடுப்பவனாக இருக்கிறான். வ்ரஜத்திலோ, அவன் பெறுபவனாக இருக்கிறான்" என்று கூறுவார்.

(தொடரும்)

# *மாலே மணிவண்ணா – 127*




–மகாவித்துவான்
மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

ஆறாம் பாடல் மணம் வீசி மலர்ந்து நிறைந்து. இதுவரை திருமாலிருஞ்சோலை மலை பற்றி ஆறாம் பாடல் (பரிபாடல் 15ஆம் பாடல்) பார்த்தோம். ஆறாம் பாடலையும் அதன் திரண்ட மொழி பெயர்ப்பையும் இனி காண்போம். பரிபாடல் ஆறாம் பாடல் (பரிபாடலில் 15ஆம் பாடல்)

<u>திருமாலிருங்குன்றத்தின் சிறப்பு</u>

புல வரை அறியாப் புகழொடு பொலிந்து,
நிலவரைத் தாங்கிய நிலைமையின் பெயராத்
தொலையா நேமி முதல் ,தொல் இசை அமையும்
புலவர் ஆய்பு உரைத்த புனை நெடுங் குன்றம்
பல; எனின் ,ஆங்கு அவை பலவே; பலவினும்
நிலவரை ஆற்றி, ,நிறை பயன் ஒருங்கு உடன்
நின்று பெற நிகழும் குன்று அவை சிலவே;
சிலவினும் சிறந்தன, தெய்வம் பெட்புறும்
மலர் அகல் மார்பின் மைபடி குடுமிய
குல வரை சிலவே; :குல வரை சிலவினும்
சிறந்தது - கல் அறை கடலும் கானலும் போலவும்,
புல்லிய சொல்லும் பொருளும் போலவும்,
எல்லாம் வேறு வேறு உருவின் ஒரு தொழில் இருவர்த்
தாங்கும் நீள் நிலை ஓங்கு இருங்குன்றம்
நாறு இணர்த் துழாயோன் நல்கின் அல்லதை
ஏறுதல் எளிதோ, வீறு பெறு துறக்கம்?
அரிதின் பெறு துறக்கம் மாலிருங்குன்றம்
எளிதின் பெறல் உரிமை ஏத்துகம், சிலம்ப.

<u>'திருமால் பலராமனுடன் அமர்ந்துள்ள நிலை நினைந்து ஏத்துக '</u>

அரா அணர் கயந் தலைத் தம்முன் மார்பின்
மரா மலர்த் தாரின் மாண் வரத் தோன்றி,

அலங்கும் அருவி ஆர்த்து இமிழ்பு இழிய,
சிலம்பாறு அணிந்த ,சீர் கெழு திருவின்
சோலையொடு தொடர் மொழி மாலிருங்குன்றம்
தாம் வீழ் காமம் வித்துபு விளைக்கும்
நாமத் தன்மை நன்கனம் படி எழ,
யாமத் தன்மை இவ்ஐ இருங்குன்றத்து,
மன் புனல் இள வெயில் வளாவ இருள் வளர்வென,
பொன் புனை உடுக்கையோன் புணர்ந்து அமர் நிலையே
நினைமின் மாந்தீர்! கேண்மின், கமழ் சீர்!

மாயோனை ஒத்தது திருமாலிருஞ்சோலை மலை

சுனையெலாம் நீலம் மலர, சுனை சூழ்
சினையெலாம் செயலை மலர, காய் கனி
உறழ, நனை வேங்கை ஒள் இணர் மலர,
மாயோன் ஒத்த இன் நிலைத்தே.

மலையைக் கண்டு தொழுக எனல்

சென்று தொழுகல்லீர் கண்டு பணிமினமே
இருங்குன்று என்னும் பெயர் பரந்ததுவே
பெருங் கலி ஞாலத்துத் தொன்று இயல் புகழது
கண்டு, மயர் அறுக்கும் காமக் கடவுள்.

மலையில் பிறக்கும் ஓசைகள்

மக முயங்கு மந்தி வரைவரை பாய,
முகில் மயங்கு முல்லை முறை நிகழ்வு காட்ட
மணி மருள் நல் நீர்ச் சினை மட மயில் அகவ
குருகு இலை உதிர ,குயிலினம் கூவ,
பகர் குழல் பாண்டில் இயம்ப அகவுநர்
நா நவில் பாடல் முழவு எதிர்ந்தன்ன,
சிலம்பின் சிலம்பு இசை ஓவாது ஒன்னார்க்
கடந்து அட்டான் கேழ் இருங்குன்று

குன்றத்தானைச் சுற்றம் சூழ போற்றுங்கள்

தையலவரொடும் ,தந்தாரவரொடும்,
கைம் மகவொடும் ,காதலவரொடும்,
தெய்வம் பேணித் திசை தொழுதனர் செல்மின்

புவ்வத் தாமரை புரையும் கண்ணன் ,
வெளவல் கார் இருள் மயங்கு மணி மேனியன்,
எவ்வயின் உலகத்தும் தோன்றி ,அவ் வயின்
மன்பது மறுக்கத் துன்பம் களைவோன்
அன்பு அது மேஎய் இருங்குன்றத்தான்.
<u>பலராமன் கண்ணன் இருவரையும் வாழ்த்தல் வேண்டல்</u>
கள் அணி பசுந் துளவினவை ,கருங் குன்றனையவை;
ஒள் ஒளியவை ,ஒரு குழையவை
புள் அணி பொலங் கொடியவை;
வள் அணி வளை நாஞ்சிலவை,
சலம் புரி தண்டு ஏந்தினவை;
வலம்புரி வய நேமியவை;
வரி சிலை வய அம்பினவை;
புகர் இணர் சூழ் வட்டத்தவை ;புகர் வாளவை:
என ஆங்கு-
நலம் புரீஇ அம் சீர் நாம வாய்மொழி
இது என உரைத்த(லி)ன் ,எம் உள் அமர்ந்து இசைத்து ,இறை ,
'இருங்குன்றத்து அடி உறை இயைக '!என,
பெரும் பெயர் இருவரைப் பரவுதும் ,தொழுதே.
<u>கடவுள் வாழ்த்து</u>
இளம்பெருவழுதியார் பாட்டு
மருத்துவன் நல்லச்சுதனார் இசை  பண் - நோதிறம்

(தொடரும்)

**<u>Bhagavatha Dharma discourse by Ramuji at Dubai</u>**

**<u>At Yahya Building, Party Hall, Behind Burjuman, Bur Dubai</u>**

**Dates: 18/5/2014 (Sunday) to 25/5/2014 (Sunday)**

**Arathi, Sthuthi, Parayan, Discourse, Bajan, Dolotsavam**

**Morning Timings: 09:30 to 13:00**

**Evening Timings: 18:30 to 21:30**

**ALL ARE WELCOME**

# அப்பாலுக்கு அப்பால்



## அக்கா மஹாதேவி -5

மஹாதேவியை வரவேற்பதற்காக பொம்மண்ணா எனும் ஒரு சரணரை அனுப்பி இருந்தார் பசவர். மஹாதேவியை வரவேற்க போனவர், மாயையினால் மஹாதேவியை பார்த்தவுடன், அவரழகில் மயங்கி போனார். ஆனால் மஹாதேவியின் கண்கள் ஒரு கணம் அவரை பார்த்த மறுகணம் அவரால் அதை தாங்கி கொள்ள முடியவில்லை. மஹாதேவியின் கால்களில் விழுந்து மன்னிப்பு கேட்டார். மஹாதேவி, "உங்கள் மேல் எந்த தவறும் இல்லை. எனக்கு சாதாரணமாக வரும் சோதனைதான் இது. என்னை எப்படி வேண்டுமானாலும் சோதித்து, அல்லமரை பார்க்க கூட்டி செல்லுங்கள். பசி, தாகம், உறக்கம், கோபம், ஆசை, பேராசை, புகழ் ஆகியவை என் மன்னன் மல்லிகார்ஜுனன் என்னை அழைத்ததிலிருந்து செயலற்று போய், எனக்கு அவற்றிலிருந்து துன்பமென்றது நின்று விட்டது" என்றார்.

அந்த சரணர் அவரை கூட்டி சென்று அனுபவ மண்டபத்தின் வெளியே ஒரு நிமிடம் தாமதிக்க சொன்னார். உள்ளே ஓடி போனவர் அல்லமரின் கால்களில் விழுந்து, மஹாதேவி வந்திருப்பதாகவும், தன் மனம் அவரை பார்த்தபொழுது தடுமாறியதையும் ஒளிக்காமல் சொன்னார். சொல்லி விட்டு, இப்படி செய்த தவறினால் தன் மனம் அலை பாய்வதாகவும் நிம்மதி இழந்து தவிப்பதாகவும் சொன்னவர், "ப்ரபுவே என் மேல் கருணை கூர்ந்து என்னை மன்னியுங்கள்" என்றார்.

ப்ரபு சிறிது நேரம் கழித்து பேசினார்." நல்லது. உங்களை போன்ற நல்ல சாதகரே தடுமாறுவாரே எனின், ,அவர் வழி நெடுக எத்தனை சோதனைகளையும் துயரங்களையும் தாண்டி வந்திருக்க வேண்டும் என்பது புரிகிறதா "என்றார்.

பொம்மண்ணா விடாமல்" ஆம் பிரபு! ஆனால் எனக்கு என்ன தண்டனை என்று தாங்கள் சொல்லவில்லையே. என் மனம் நிலை கொள்ள மறுக்கிறது "என்றார்.

"பொம்மண்ணரே! தவறு செய்வது மனித மனதின் ஸ்வபாவம். அதை மறுபடி மறுபடி செய்வதே பெரும் குற்றம். விவேகத்தை துணை கொள்ளுங்கள். இத்துனை பேருக்கு முன்னால், உங்கள் குற்றத்தை ஒப்பு கொண்டதினால், உங்கள் மனம் நாணுகிறதல்லவா? அது உங்களை குத்தும். அதுதான் இதற்கு சிறந்த தண்டனை. மேலே மஹாதேவியை அழைத்து வாருங்கள்" என்றார்.

பொம்மண்ணா ஓடினார். மஹாதேவியை பார்த்து "அம்மா! உங்களை பிரபு அழைக்கிறார் வாருங்கள்" என்றார்.

எதற்கும் எளிதில் கலங்கவே கலங்காத மஹாதேவியின் மனம் ஒரு கணம் தடுமாறியது. யாரை காண அவர் மனம் தவித்ததோ அவர் அல்லவா கூப்பிடுகிறார்? அவரிடம் தன்னை யாரென்று சொல்லி கொள்வது? ஞானமாக அவரிடம் போய் பேசலாமா? தாம் எதற்காக அவரை பார்க்க வந்தோம் என்று கேட்டால் என்னவென்று சொல்வது? அவர் நம்மை எப்படி அழைப்பார்? பிறர் அதை பற்றி என்ன நினைப்பர், என்று மஹாதேவிக்கே தோன்றியது.

உள்ளிருந்து இதை கவனித்த அல்லமர், சிறிதே நகைத்தார். ஆனால் அந்த நகை கொஞ்சமும் உதடுகளின் வழி வெளிவரவில்லை. கண்கள் ஏதுமே நடக்காதது போலிருந்தன. அர்ச்சாவதாரத்தில் பெருமான் முழு சான்னித்யத்துடன் விளங்கினாலும், எப்படி கல்லாக பார்வைக்கு காட்சி அளிக்கிறாரோ, அப்படி சாதாரண சரணர்களுக்கு அல்லமர் காட்சி அளித்தார்.

அதற்குள் உள்ளே வந்த மஹாதேவிக்கோ அல்லமரின் தேஜோமயமான ரூபத்தை பார்க்கையில் வியப்பு மேலிட, அவரும் ஆடாமல் அசையாமல் நின்றார். மொத்த சரணர் கூட்டமும் எழுந்து, மஹாதேவியை வாழ்த்தி வரவேற்றது. பசவர் சந்தோஷத்தின் எல்லையில் இருந்தார். அல்லமர் இவற்றை கண்டு கொள்ளவே இல்லை. மாறாக அவர் முகம் கொஞ்சம் கடுகடுவென மாறியது. பசவர் சரணர்களை பார்த்து கைகாட்ட, அனைவரும் அமைதியாக அமர்ந்தனர். அப்பொழுது மஹாதேவியை பார்க்கையில், அர்ச்சாவதாரம் முன் நிற்கும் மஹாத்மா போல் இருந்தது.

(தொடரும்)

"மதுரமுரளி" ஆண்டு சந்தா ரூ 120
For Details: **+91-44-24895875**

"மதுரமுரளி" மாத இதழ் சந்தா அனுப்ப முகவரி:

Guruji Sri Muralidhara Swamigal Mission, 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83 .
**D.D.** in name of **Guruji Sri Muralidhara Swamigal Mission** / நேரில் ரொக்கம் / மணியார்டர் (**D.D /M.O/Cash**) மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

ஒரு வருட சந்தா மட்டுமே பெற்று கொள்ளப்படுகிறது.
கொரியரில் பெற விரும்புவோர் கொரியர் செலவை தனியாக செலுத்தி பெறலாம்.
***ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.***

* Publisher : S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission
* Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
* Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
* Advertisements in Madhuramurali are invited.

| ஸ்ரீஸ்வாமிஜியின் நிகழ்ச்சிகள் | |
|---|---|
| ஏகாதசி | மே 10, 24<br>ஜூன் 9, 23 ஜூலை 8, 22 |
| ஏப் 25 - மே1 | புவனேஸ்வரி அம்மன் கோவில் ஸ்ரீமத்பாகவதம் |
| மே 2 | அக்ஷய திருதியை |
| மே 13 | ஸ்ரீ நரசிம்ம ஜெயந்தி |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org என்னும் முகவரிக்கு அனுப்பவும்.